**இராஜபாளையம் நகராட்சி**

**31.01.2023**

**திருவள்ளுவர் ஆண்டு 2054 சுபகிருது வருடம் தை மாதம் 17 ம்தேதி 2023 ம் வருடம் ஜனவரி மாதம் 31 ம் தேதி செவ்வாய்க்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமிராஜா நினைவுக்கூட்ட மண்டபத்தில் காலை 11.30 மணிக்கு நடைபெற்ற இந்நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை - திருமதி.எ.அ.சு.பவித்ரா ஷ்யாம் நகர்மன்றத்தலைவர்**

1 ) <u>நகர்மன்ற தலைவர் திருமதி.எ.அ.சு.பவித்ராஷ்யாம் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

இராஜபாளையம் நகராட்சியின் சொத்துவரி விகிதம் குறைக்ககோரிய தீர்மான எண் 141, நாள் 20.05.2022–ல் நிறைவேற்றப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழியாக தமிழ்நாடு அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேற்காணும் தீர்மானம், அரசாணை (D) எண் 32, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை, நாள் 27.01.2023ன்படி ரத்து செய்யப்பட்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81A உட்பிரிவு (3)–ன்கீழ் அரசின் முன் அனுமதி கோரும் சொத்து வரி விகிதம் குறைப்பிற்கான புதிய கருத்துருவினை அரசுக்கு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணை (D) எண் 32, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை, நாள் 27.01.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81A உட்பிரிவு (3)–ன்கீழ், சொத்து வரி விகிதம் குறைப்பிற்கான அரசின் முன் அனுமதி கோரும் புதிய கருத்துரு தயார் செய்திட, நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழியாக, புதிய நகர்மன்ற தீர்மானம் தமிழக அரசின் அனுமதிக்கு கீழ்காணும் விபரப்படி அனுப்பிவைக்கப்படுகிறது.

01–04–2000 முதல் தற்போதுவரை உள்ள சொத்துவரி விகிதம் (Rate of Tax) 19% சதவீதம் உள்ளது. இந்த சொத்துவரி விகிதத்தின் படி சொத்துவரி சுமை இதர சிறப்பு நிலை (Special grade) நகராட்சிகளை விட அதிகமாக உள்ளது என நகர்மன்றம் கருதுகிறது.

| வ.எண் | தீர்மானம் எண்.238 நாள்.27.04.2000 ன்படி 01.04.2000 முதல் சொத்துவரி வகைபாடுகள் |
|---|---|
| 1 | பொதுகாரியம் –8% |
| 2 | துப்புரவு பணி –2% |
| 3 | தெரு விளக்கு –2% |
| 4 | குடிநீர் வடிகால் –6% |
| 5 | கல்வி வரி –1% |
| | மொத்தம் –19% |

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 84ன்படி அனைவருக்கும் **பொதுவான வரி விதிப்பு** ( Taxation should be Uniform) என கூறுகிறது.

சொத்துவரி பொது சீராய்வு அரசாணை (நிலை) எண் 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் 30.03.2022ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இராஜபாளையம் நகராட்சியில் உள்ள வரி விகிதம், இதர சிறப்பு நிலை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் உள்ள வரிவிகித்தை விட அதிகமாக உள்ளது. மேலும்

வருங்காலங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சொத்துவரி கேட்போடு கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் 6 சதவீதம் உயர்வு செய்யப்பட உள்ளது.

இதன் காரணமாக அதிகப்படியான வரி விதிப்பை தவிர்க்கும் நோக்கில் வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அருகில் உள்ள கிராம ஊராட்சிக்கோ அல்லது பேரூராட்சிகளுக்கோ அல்லது அருகில் உள்ள நகராட்சிகளுக்குகோ செல்ல வாய்ப்பு உள்ளது. இது இராஜபாளையம் நகராட்சிக்கு மிகுந்த நிதியிழப்பினை ஏற்படுத்தும்.

மேலும் இராஜபாளையம் நகராட்சி பகுதியில் வசிக்கும் பொது மக்கள் சொத்துவரி விகிதம் அதிகமாக உள்ளதை ஆட்சேபனை செய்து தொடர்ந்து விண்ணப்பம் சமர்ப்பித்து வருகின்றனர்.

எனவே இராஜபாளையம் நகராட்சி பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி, பின்வருமாறு சொத்துவரி விகிதத்தை தற்போது நடைமுறையில் உள்ள 19 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாக குறைக்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 81–A உட்பிரிவு (3)–ன் கீழ் அரசின் முன் அனுமதி கோரும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்ப மன்றம் தீர்மானிக்கிறது.

| வ.எண் | தீர்மானம் எண்.238 நாள்.27.04.2000 ன்படி 01.04.2000 முதல் சொத்துவரி வகைபாடுகள் | குறைக்கப்பட வேண்டிய சொத்துவரி வகைபாடுகள் |
|---|---|---|
| 1 | பொதுகாரியம் –8% | பொதுகாரியம் –7% |
| 2 | துப்புரவு பணி –2% | துப்புரவு பணி –1.5% |
| 3 | தெரு விளக்கு –2% | தெரு விளக்கு –1.5% |
| 4 | குடிநீர் வடிகால் –6% | குடிநீர் வடிகால் –5% |
| 5 | கல்வி வரி –1% | கல்வி வரி –1% |
| | மொத்தம் –19% | மொத்தம் –16% |

**தீர்மானம் எண் 60 நகர்மன்றத்தலைவர் திருமதி.எ.அ.சு.பவித்ராஷ்யாம் அவர்கள் பிரேரபிக்க நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.கு.கல்பனா அவர்கள் ஆமோதிக்க அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது .**

**2 ) அரசாணை (D) எண் -32 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள் 27.01.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. அ2/1582/2022**

**அலுவலகக்குறிப்பு**

**மன்றம் பதிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண் 61 பதிவுசெய்யப்பட்டது.**

(ஓம்)எ.அ.சு.பவித்ராஷ்யாம்
நகர்மன்ற தலைவர்
இராஜபாளையம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
இராஜபாளையம் நகராட்சி